# PDM COURT, SANKARANKOVIL

**தேதி 15.04.2024**

**E.P.No.17/2021 in OS.No.113/2006**

**எ.ம.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த மனுவில் நான் என்ன கட்சி செய்கிறேன் என்றால் தீர்ப்புத்தொகையை நான் ஏற்கனவே செலுத்திவிட்டேன் என கட்சி செய்கிறேன். தீர்ப்புத்தொகையை யாரிடம் செலுத்தியதாக கட்சி செய்கிறேன் என்றால் தீர்ப்பை பெற்ற வேலுச்சாமிகோனாரிடம் பணத்தை செலுத்தியதாக சொல்கிறேன். வேலுச்சாமிகோனார் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். இறந்துபோன வேலுச்சாமியின் வாரிசுகள்தான் தற்போது இந்த நிறைவேற்றுதல்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வேலுச்சாமிகோனாரின் தகப்பனார் பெயர் பிச்சையாகோனார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வேலுச்சாமிகோனார் வாடிக்கோட்டை கிராமம் வடக்குத்தெருவில் குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். வாடிக்கோட்டை கிராமத்தில் வடக்குதெருவில் குடியிருந்து வந்த வேலுச்சாமிகோனார்தான் எனக்கு கடன் கொடுத்தார் என்றால் சரிதான்.

2. அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு பிறகு எந்த தேதியில் நான் வேலுச்சாமிகோனாரிடம் பணத்தை திருப்பி கொடுத்தேன் என்றால் 30.09.2013 அன்று பணத்தை கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் வேலுச்சாமிகோனார் வீட்டில் இருந்தாரா என்றால் இருந்தார். நான் பணம் கொடுத்ததாக் சொல்லும் சமயத்தில் வேறு யாராவது உடன் இருந்தார்களா என்றால்

கடையநல்லூர் அச்சம்பட்டி கிராமத்தை சேர்ந்த செல்லத்துரை என்பவர் உடன் இருந்தார். நான் பணம் கொடுப்பது செல்லத்துரைக்கு தெரியும். நான் பணம் கொடுத்ததற்கு வேலுச்சாமிகோனாரிடமிருந்து எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. அவர் எழுதிக்கொடுத்ததாக சொன்னார் நான் நம்பிக்கையின் பேரில் வந்துவிட்டேன். எனக்கு எழுதப்படிக்கத்தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் வேலுச்சாமிகோனரின் வாரிசுசான்று என்றால் எனக்கு தெரியாது.

3. கருப்பசாமி என்பவர் வேலுச்சாமிகோனாரின் மகன் என்பது மட்டும் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் வேலுச்சாமிகோனாரின் மகன் கருப்பசாமி என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் வேலுச்சாமிகோனாரின் வீட்டில் வைத்துதான் பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம். எந்த கிழமை பணம் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணைக்கு எதிராக நான் சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் A.S.No.64/2010 ன் கீழ் மேல்முறையீடு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் வேலுச்சாமிகோனாரிடம்தான் பணம் கொடுத்தேனா என்றால் ஆமாம். நான் அவரை நன்றாக அடையாளம் கண்டுதான் பணத்தை கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததாக சொல்லும் 30.09.2013 தேதியில் வேலுச்சாமி கோனார் உயிருடன் இல்லை என்றால் சரியல்ல. உயிருடன் இருந்தார். வேலுச்சாமிகோனார் 20.05.2013 அன்று இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு முன்பே வேலுச்சாமிகோனார் இறந்துவிட்டார் என்றாலும், தற்போது வழக்கிற்காக நான் வேலுச்சாமிகோனாரிடம்

30.09.2013 அன்று பணம் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் பொய்யான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்ததால் என் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் வேலுச்சாமிகோனாரிடம் பணம் கொடுத்ததாக சொல்வது பொய்யானது என்றாலும், எனவே இம்மனு மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**